**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.751/2024 நாள்- 29.04.2026

**பி.வா.சா.1.ஜெகதீசன்**

**குறுக்கு விசாரணை வாதி தரப்பில்**

எதிர்வழக்குரைக்கும், நிரூபணவாக்குமூலத்திற்கும் என் வழக்கறிஞருக்கு நான் தான் தகவல் சொன்னேன் என்றால் சரிதான். நான் முதலில் சிங்கப்பூரில் வேலை பார்த்து பின்பு ராம்கோ நிறுவனத்தில் வேலை பார்த்து ஓய்வு பெற்றுவிட்டேன். வாதி என்ன வேலை பார்த்தார் என்ற விவரம் எனக்கு தெரியும் எனக்கு நண்பர் வாதியை 20 வருடங்களாக தெரியும். ராம்கோ நிறுவனத்தில் ஒரே இடத்தில் நாங்கள் இருவரும் சேர்ந்து பணிபுரிந்தோம். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரமும் ஆவணங்கள் பற்றிய விவரமும் எனக்கு தெரியும். காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்வது சம்பந்தமான விவரங்கள் எனக்கு தெரியும். எனக்கு அலைபேசி மற்றும் வாட்ஸ் அப்பில் குறுஞ்செய்தி அனுப்பும் விவரம் தெரியும் வழக்கு முகவரியில் தான் குடியிருந்து வருகிறேன். அது என் சொந்த வீடு என்றால் எனது மனைவி வீடு. நான் அடிக்கடி இராஜபாளையம் வந்து செல்வேனா என்று கேட்டால் எப்போதாவது வந்து செல்வேன். 10.02.2021 அன்று அவசர தேவைக்காகவும், குடும்ப செலவிற்காகவும் வாதியிடம் ரூ.5 லட்சம் கடன் கேட்டேன் என்றும் அதற்கு ரூ.100/-க்கு 1 வீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக் கொண்டேன் என்றும் அந்த தொகையை காசோலை மூலமாக கடனாக கொடுத்தார் என்றால் வாதி தான் என்னிடம் பெற்ற கடனை திரும்ப கொடுத்தார். அந்த காசோலையை 15.02.2021 அன்று எனது வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்து 16.02.2021 அன்று என் வங்கியிலிருந்து பணத்தை எடுத்துவிட்டேன் என்றால் சரிதான். பணத்தை எடுத்தபிறகு வாதிக்கு குறுஞ்செய்தி அனுப்பினேன் என்றால் சரிதான். 17.02.2021 அன்று ஒரு குறுஞ்செய்தி அனுப்பினேன் என்றால் பணத்தை எடுத்தது சம்பந்தமாக குறுஞ்செய்தி அனுப்பினேன். 17.02.2021 அன்று I will pay on 25 or 26 Feb 2021 என்று குறுஞ்செய்தி அனுப்பினேன் என்றால் சரிதான். வாதி குறுஞ்செய்தி மூலமாக பணத்தை கேட்டார் என்றும் நான் அதை தருவதாக குறுஞ்செய்தி மூலம் பதில் கொடுத்து வந்தேன் என்றால் சரிதான். 11.04.2021 அன்றும் மேற்கொண்டு நாட்கள் தேவைப்படுகிறது என்றும் பணத்தை முழுவதுமாக தீர்த்து விடுவதாக குறுஞ்செய்தி அனுப்பினேன் என்றால்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

சரிதான். 10 நாட்களில் நான் பணத்தை தராததால் 23.04.2021 அன்று பணத்தை உடனடியாக தரவேண்டும் என்று வாதி குறுஞ்செய்தி அனுப்பினார் என்றால் சரிதான். அன்றைய தினமே 26.04.2021 திங்கட்கிழமை அன்று பணத்தை கொடுத்துவிடுவதாக வாதிக்கு குறுஞ்செய்தி அனுப்பினேன் என்றால் சரிதான். 19.08.2022 அன்று 3 மாத கால அவகாசம் கேட்டு மீண்டும் குறுஞ்செய்தி அனுப்பினேன் என்றால் சரிதான். பலமுறை வாதிக்கு பணத்தை திருப்பி தருவதாக குறுஞ்செய்தி அனுப்பினேன் என்றால் சரிதான். என்னிடம் அலைபேசி மூலமாக கடனை திருப்பி செலுத்தக் கோரி போன் செய்தார் என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியது சம்பந்தமாக நான் வாதியிடம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் வாதி எந்த தேதியில் எந்த இடத்தில் வீடு கட்டினார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 2020 ல் வீடு கட்டும் போது வாதி சென்னையில் இருந்து தான் வீடு கட்டினார். வாதி வீடு கட்டும் போது எந்த தேதியில் எங்கு வைத்து கடன் கேட்டார் என்ற விவரத்தை எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அந்த கடனை நேரடியாகவா அல்லது தொலைபேசியில் கேட்டாரா என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வாதி கடன் கேட்ட பிறகு எத்தனை நாட்கள் கழித்து கடன் கொடுத்தேன் என்று எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் நான் வாதிக்கு கடன் கொடுத்தேன் என்று எதிர்வழக்குரையில் தேதி குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அந்த கடனை வாதிக்கு எந்த வகையில் கொடுத்தேன் என்று காட்டுவதற்கு எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். ஆனால் ரொக்கமாக கொடுத்தேன். கடந்த 2020 ஏப்ரல் மாதத்தில் நான் வாதிக்கு கடன் கொடுத்ததாக எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் எந்த தேதி என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். ஏப்ரல் 2020 ம் தேதி கொரானா தொற்று காலம் என்றால் சரிதான். கொரானா தொற்று பரவல் காலத்தில் மக்கள் வெளிநடமாட்டம் இல்லாத நிலையில் நான் வாதிக்கு ரொக்கமாக ரூ.5 லட்சம் கடனாக கொடுத்தேன் என்று கூறுவது நம்பக்கூடியதாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. ரூ.5

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

லட்சம் கடன் கொடுத்தேன் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணங்கள் இல்லை. ஏப்ரல் 2020 அன்று வாதி வெளிநாட்டில் தான் இருந்தார் என்றும் இந்தியாவில் இல்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. ஏப்ரல் 2020 அன்று வாதி வெளிநாட்டில் தான் இருந்தார் என்றும் இந்தியாவில் இல்லை என்றும் வெளிநாட்டில் இருந்த நபரிடம் ரொக்கமாக ரூ.5 லட்சம் கடன் கொடுத்தேன் என்று கூறுவது நம்பக்கூடியதாக இல்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4-ன் படி வாதி ஏப்ரல் மாதம் இந்தியாவில் இல்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. நான் வாதியிடம் வாங்கிய ரூ.5 லட்சம் கடனை திருப்பி செலுத்தாமல் இருக்க வேண்டி வாதி தான் என்னிடம் கடன் வாங்கினார் என்றும் அந்த கடனை திருப்பி செலுத்தினார் என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றும் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. 2023 பிப்ரவரி மாதம் ரூ.5 லட்சம் தொகையை திருப்பிக் கேட்டதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எந்த தேதியில் திருப்பிக் கேட்டேன் என்று எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க வா.சா.ஆ.1- காசோலையை எந்த தேதியில் கேட்டேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1- காசோலையை நான் நேரில் வாங்கினேனா அல்லது தபால் மூலம் பெற்றேனா என்று கேட்டால் சென்னையில் வைத்து நேரில் வாங்கினேன். எந்த தேதியில் காசோலை வாங்கினேன் என்று வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்த அன்று வாங்கினேன். தாவா காசோலையை வாதியிடம் நான் கடன் வேண்டும் என்று கேட்டதால் இராஜபாளையத்தில் வைத்து வாதி என்னிடம் கொடுத்தார் என்று சொன்னால் சென்னையில் வைத்து கொடுத்தார். வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு நானும், செந்தில்வேல் மற்றும் வாதியும் சேர்ந்து பேசவில்லை என்று சொன்னால் சரியல்ல. செந்தில்வேலை விசாரித்தால் உண்மைத்தன்மை தெரியவரும் என்றால் சரிதான். வாதியிடம் கடன் வாங்கி விட்டு திருப்பி செலுத்திவிடுவதாக குறுஞ்செய்தி மூலம் ஒப்புக் கொண்டுவிட்டு தற்போது வாதி என்னிடம் கடன் வாங்கியதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதி வீடு கட்டும் சமயத்தில் என் மீது நம்பிக்கையின் அடிப்படையில் காசோலை மூலம் ரூ.5 லட்சம் கடன் கொடுத்தார் என்றும் அதை மோசடி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யான சங்கதிகள்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

குறிப்பிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி தற்போது சென்னையில் தான் குடியிருந்து வருகிறார் என்றும் வெளிநாட்டில் வேலை பார்க்கவில்லை என்றும் அந்த விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. நான் இராஜபாளையத்தில் வைத்து வாதியிடம் கடன் பெற்றதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது என்றும் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,

இராஜபாளையம்.